# சங்கஇலக்கிய அகப்பாடல்களின் கவிதை மரபு

**ப. காந்தி**
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம், சேலம்

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** II

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

எந்தப் படைப்பும் படைப்பாளனின் உலகியல் சூழல்களைக் கொண்டே படைக்கப்படுகின்றது. எனவே படைப்பு இயற்கைக்கும் மனித வாழ்வியலுக்கும் மிகநுட்பமான உறவைச் சொல்வதாக இருக்கிறது. சிறந்த படைப்பு என்பது தனிப்பட்ட ஒரு மனிதனின் உணர்வுகளைப் படம் பிடித்துக் காட்டுவதன்று, உலகப் பொது உணர்வுகளை, மனித உணர்வுகளை அல்லது அனுபவங்களைப் படம் பிடித்துக் காட்டுவதாகவே இருக்கிறது. வாசகனும் படைப்பைப் புரிந்து கொள்வதில் தான் சார்ந்த இயற்கை. சமூகம், வாழ்க்கை வரலாறு முதலியவற்றை உள்ளடக்கிய வெளியில் இருந்துதான் செயல்படுகிறான். அவ்வகையில் இன்றைய இலக்கியச் சூழலில் பின் நவீனத்துவம், நடப்பியல், யதார்த்தவியல், பெண்ணியம், தலித்தியம் போன்ற பல்வேறு கோட்பாடுகள் முதன்மைத்தன்மை கொடுக்கப்பட்டு விவாதிக்கப்படுகின்றன. இவை ஒருபுறம் இருக்க, தொல்காப்பியரின் திணை சார்ந்த கோட்பாடானது, நிலம் காலம், சமூகம், வாழ்க்கை மனித உணர்வு (முதல், கரு, உரி) போன்றவை ஒன்றோடொன்று இணைந்து கவிதையாக்கக் கூறுகளை உள்ளடக்கியதாக உள்ளன. எத்தகைய படைப்பின் அடிப்படைக் கூறுகளும் இக்கூறுகள் இன்றி இருக்காது. அவ்வகையில் தமிழர், தமிழ் நிலம் சார்ந்த வாழ்வியலையும் கருத்தியல்களையும் உள்ளடக்கிய திணையை அடிப்படையாகக்கொண்ட கவிதைக் கோட்பாட்டை தெளிதல் அவசியமாகும். இழந்துபோன தமிழர் மரபின் வரலாற்றை மீட்டெடுத்தல் காலத்தின் தேவையாகும். ஆக சங்கஇலக்கியத்தின் தெளிவைத் தொல்காப்பியம் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. சங்க இலக்கியத்திற்குத் தரப்படும் விளக்கங்கள் தொல்காப்பிய இலக்கண மரபுகளை மையமாகக்கொண்டே விளக்கப்படுகின்றன. எனவே தொல்காப்பியம் கூறும் கவிதைப்பொருள் மரபு பற்றிய சிந்தனையை சங்க அகப்பாடல்களான நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு ஆகிய பாடல்களின் கவிதையாக்கத்தின் ஆராய்தல் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### தொல்காப்பியமும் கவிதையியல் சிந்தனையும்

தொல்காப்பியம் தமிழில் கிடைக்கின்ற மிகப்பழைய இலக்கண நூல். இந்நூல் இலக்கண இலக்கிய ஆய்வுநூல் மட்டுமல்லாது, மானிடயியல் சமூகவியல், பண்பாட்டுச் சூழலியல், உளவியல் ஆகியவற்றைப் பற்றிய நூலாகும். தமிழ்மொழியின் கவிதை வரலாற்றையும் பாணர் மரபையும் விளங்கிக்கொள்ள

தொல்காப்பியத்தின் காலம் கி.மு.5320 லிருந்து கி.பி.8ஆம் நூற்றாண்டு வரை வேறுபடுகின்றது. எனினும் தென்னிந்தியாவின் மொழியியல் நிலைமைகளைக் கவனத்தில்கொண்டு ஆராயும் போது "சாசனியல் சான்றுகளுடன் தொல்காப்பியத்துக்கும் ஆதி சமஸ்கிருத நூல்களுக்குமிடையிலான தொடர்புகளைப் பார்க்கும்போது இதன் காலம் கி.மு.3 – கி.மு.6 வரையிலானதாகலாம் என்பர் தகனோபுதகஸாகி (1988:பக்.8) என அம்மன்கிளி முருகதாஸ் இக்கருத்தை முன்வைக்கிறார் (சங்கக்கவிதையாக்கம் மரபும் மாற்றமும், 2006:41)

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் முதல் இரண்டு இயல்கள் அகம், புறம் என வகுக்கப்படுகின்றன. இதனைத் தொடர்ந்து வரும் களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியியல் ஆகியன அகத்திணைக்குரியதே. உவமவியல், செய்யுளியல், மரபியல் ஆகியன மூன்றும் செய்யுள் யாப்பு தொடர்பானவையாகும். இவை சங்க இலக்கியத்தின் பொருள், யாப்பு, அணி ஆகியவைக் குறித்து விவரிக்கின்றன. தொல்காப்பியம் கூறும் கவிதையியல் கொள்கைக் குறித்து கா.சிவத்தம்பி "சங்கப்பாடல்களை விளங்கிக் கொள்வதற்குத் தொல்காப்பியத்தையே ஆதார கருவியாகக் கொள்வதனால் தொல்காப்பியத்தின் ஊடே மேற்கிளம்பும் கவிதைக் கொள்கைகள் (Theories of Poetry) கவிதைப் பண்பாடு (Poetic Culture) யாவை என்பதைத் திட்டவட்டமாக அறிந்துகொள்வது அவசியமாகின்றது. தமிழின் உரைப்பாரம்பரியம் தொல்காப்பியத்தையே சங்க இலக்கிய விளக்கத்துக்கான திறவுகோலாகக்கொண்டு வந்துள்ளது. எனவே சங்கஇலக்கியக் கவிதைப்பண்பாட்டையும் தொல்காப்பியக் கவிதைப் பண்பாட்டையும் இணைத்து நோக்குவது அவசியமாகிறது" என்கிறார். (தொல்காப்பியமும் கவிதையும், 2012, ப.33). தொல்காப்பியத்தை ஒரு பாவியல் நூலாகக் கொள்ளும் ச.அகத்தியலிங்கம், "பொருளதிகாரம் வாழ்வியல் பற்றிக் கூறுவதோ அல்லது வரலாறு பற்றிக் கூறுவதோ அன்று அது பண்டைத் தமிழ்க்கவிதைகள் அல்லது பாட்டு அல்லது பாடல்பற்றிக் கூறும் ஒரு பாவியல் நூல்" எனக் கூறுகிறார் (சங்க இலக்கியம், கவிதையியல் நோக்கு சிந்தனைப் பின்புல மதிப்பீடு, ப.51).

பா, பாடல், பாட்டு, கவிதை என்னும் சொல் வழக்குகளை வரலாற்று நிலைப்படுத்தி ஆராய்தல் அவசியமாகிறது. இக்காலத்தில் பெருவழக்காகியுள்ள கவிதை எனும் சொல்லின் வளர்ச்சியை கா.சிவத்தம்பி "ஆங்கிலத்தில் Poem, Poetry எனச் சுட்டப்பெறுவதனை தமிழில், அன்று கவிதையென்ற பெயர் கொண்டே சுட்டுகின்றோம். அவ்வாறு சுட்டும் பொழுதே கவித்துவத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றோம் என்பது கருத்தாகும். செய்யுள் என்ற சொல் தொல்காப்பியர் காலத்தில் இலக்கிய வடிவங்கள் எல்லாவற்றையும் குறித்து நின்றதெனினும் பின்னர் படிப்படியாக அது பாடல் வடிவத்தைக் குறிக்கின்ற சொல்லாயிற்று. 'நீதிச் செய்யுள்கள்' என்ற சொல்லும் இதற்கு நல்ல உதாரணமாகும். இதனைவிட பா, பாடல் என்ற சொற்களே கவிதையெனும்…. வடிவத்தைக் குறிக்கத் தொல்காப்பியத்திலே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன" (தொல்காப்பியமும் கவிதையியலும், 2012, ப.11) என விவரிக்கின்றார்.

**சங்க இலக்கியத்தில் கவிதையெனும் சொல்**

சங்க இலக்கியமானது பாணர் மரபு, புலவர் மரபு என்னும் இரு மரபு நிலையை உள்ளடக்கியது. இவர்களில் புலவர்களின் இலக்கியமே மேலாண்மைப்படுத்தும் நிலையில் அமைகின்றது. தமிழிலக்கியப் பாரம்பரியத்தில் கவிதையெனும் சொல் பரிபாடலிலே முதல்முறையாக வருகிறது. வைகையில் வரும் புதுப்புனலின் பாய்ச்சலின் இயல்பை குறிக்கும் வகையில்,

**"மாசில் பனுவற் புலவர் புகழ்புல**
**நூவிற் புனைந்த நன்கவிதை மாறாமை**
**மேவிப் பரந்து விரைந்து வினைநந்தத்**
**தூயிற்றே தண்ணம் புனல்" (பரி.வையை.6:7-10)**

இதில் குற்றமற்ற நூல்களை ஆக்குகின்ற புலவர்களின் புகழ்பெற்ற அறிவுடைய நாவினாலே புனையப் பெற்றதான நற்கவிதையானது மாறுதல் ஏதுமின்றி மேவிப் பாய்ந்து தன்பயனைச் செழுமையுடன் பரப்பியும் வருகையில் அந்தக் குளிர்ந்த நீர்ப்பாய்ச்சலானது பாய்ந்தது என்பதில் கவிதை எனும் சொல்லின் பயன்பாடு அறிவாழத்தின் தன்மையினை முதன்மைபடுத்துகின்றது.

**கவிதை உருவாக்கம்**

தொல்காப்பியச் செய்யுளியல் முதல் நூற்பாவில் செய்யுள் பற்றிய விளக்கத்தில் பாவின் உறுப்புக்களைக்கூறி பின் பாவினைத் தொடர்ந்து 'திணையே கைகோளென' பாவில் இடம்பெற வேண்டிய பொருள் பற்றிக் கூறிச் செல்கின்றார் தொல்காப்பியர். செய்யுள் என்பது உலகியல் வழக்கிலிருந்து பெறப்பட்ட நாடகவழக்குடன் அமைந்த புலனெறி வழக்கமாகும். செய்யுளியல் கவிதைக் கோட்பாட்டை முன்வைக்கும் என்ற நிலையில் "மாத்திரை முதலாக அளவியல் ஈறாகச் சொல்லப்பட்ட 12 உறுப்புகளும் செய்யுளின் வடிவம் சார்ந்தவை என்றும் திணை முதல் மாட்டுவரை உள்ள 13 உறுப்புகள் பாடுபொருள் சார்ந்தவை என்றும் வண்ணம் நயம் தந்து வடிவத்தோடு இணைந்தும் வருகின்றன என்ற நிலையில் செய்யுளின் கட்டமைப்பு விளக்கப்படுகிறது" என இந்திரா மனுவேல் குறிப்பிடுகிறார் (தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள், ப.44) கவிதை என்பது மனித உள்ளத்துணர்வை எழுப்பி நிற்கும் ஒரு கலையாக்கம். அவ்வகையில் தொல்காப்பியம் கவிதையாக்கக் கொள்கையில் பாடுபொருள் சார்ந்த நிலையில் திணையுள் அகமும் புறமும் கைகோளும் பகுக்கப்பட்டது. செய்யுளாக்க நிலையில் முதல், கரு, உரி துறை ஒருவகையாகவும், எச்சம், முன்னம், ஒரு வகையிலும், மெய்ப்பாடு, பொருள், பயன், ஒருமை கருதி அவை ஒன்றாகவும் களனும் காலமும் நெருக்கமுடையதால் அவை ஒன்றாகவும் வகைமை செய்யப்படுகின்றன.

**சங்க அகப்பாடல்களில் கவிதைப் பொருள் மரபு**

கவிதை உருவாக்கத்தின் அடிப்படைக் கூறுகளாக அமைவன சூழல்கள், மனநிலைகள் அல்லது மனவுணர்வுகள் போன்றவைகளே படைப்பாக்கத்தின் உயிரம்சமாக உள்ளன. தொல்காப்பியப் பொருளியலில் கூறப்பட்டள்ள கூறுகள் நெஞ்சொடு கிளத்தல், வரைதல் வலியுறுத்தல், வரைவுகடாதல், செலவழுங்குதல், கிளவிபாராட்டு, ஊடல்மொழி, வினைமுடித்து மீளல் போன்றன முக்கியமான கவித்துவ இடங்ளாகும். இத்தகைய சூழல்களில் நெஞ்சோடு பேசுதலும், தனித்துப் புலம்பலும் அ·.றிணைப் பொருள்களை உயிருடையன போலக்கருதி மொழிதலும் இயல்பாய் நிகழ்கின்றன. இத்தகைய கவித்துவச் சூழல்களிலேயே உவமை உள்ளுறை இறைச்சி உத்திகளும் இயல்பாய் இணைகின்றன. பிரிவ, துயரம், அவலம், இழப்பு, மகிழ்ச்சி, அகவாழ்விற்கும் புறவாழ்விற்கும் எல்லா உணர்வுகளும் கவிதைப் பொருளாய் அமைகின்றன. சங்க இலக்கிய அகத்திணைப் பாடல்களின் பொருள் மரபு பற்றி கூறுகையில், தொல்காப்பியம் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

**"உயர்ந்தோர் கிளவி வழக்கொடு புணர்தலின்**
**வழக்கு வழிப்படுதல் செய்யுட்குக் கடனே" (தொல்.பொருளியல்.1163)**

என அகப்பாடல்களின் சிறப்பு பண்பான அகமாந்தர்களின் கூற்று நிலையானது சமூகத்தின் உயர்வர்கத்தின் மாந்தர்களான உள்ளமையே சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது.

சங்கப்பாடல்களின் அகமாந்தர்கள் யாவும் யாரோ ஒருவரை விளித்து தோழி (நற்.4) நெஞ்சம் (அகநா.3:13) நாட (குறுந்.18:1) மகிழ்ந (ஐங்.77:1) பாண (ஐங்.89:1) அன்னை (ஐங்.104:1).

**முலைமுகஞ் செய்தன முள்ளெயிறு இலங்கி**
**தலைமுடி சான்ற தண்டழை யுடையை**
**அலமரல் ஆயமோடு யாங்கணும் படாஅல**
**மூப்புடை முதுபதி தாக்கு அணங்கு உடைய**
**காப்பும் பூண்டிசின் கடையும் போகலை**
**பேதை அல்லை – மேதைஅம் குறுமகள் (அகநா.7:1-6)**

எனும் பாடலில் செவிலித்தாய் தன் மகளை விளித்து அறிவுரை கூறுகிறாள். பெரும்பாலான அகப்பாடல்கள் தலைவன், தலைவியின் உணர்வெழுச்சியின் வெளிப்பாடகவே அமைகின்றன. பிரிந்த தலைவன் வருவானோ என ஏங்கும் தலைவி

**கருங்கால் வெம்பின் ஒண்பூ யாணர்**
**என்னை இன்றியும் கழிவது கொல்லோ?**
**ஆற்றுஅயல் எழுந்த வெண்கோட்டு அதவத்து**
**எழுகுளிறு மிதித்த ஒருபழம் போலக்**
**குழைய கொடியோர் நாவே,**
**காதலர் அகல, கல்லென றவ்வே (குறுந்.24:1-6)**

எனும் பாடலில் அறியலாம். சிறு தலைவி தலைவன் வரும் வழியின் கடுமையை எண்ணி வருந்துகிற தலைவி,

**எம்ஊர் வாயில் ஒண்துறைத் தடைஇய**
**கடவுள் முதுமரத்து, உடன்உரை பழகிய,**
**தேயா வளைவாய், தெண்கண் கூர்உகிர்,**
**வாய்ப்பறை அசாஅம் வலிமுந்து கூகை**
**-----------------------------------------------**
**எஞ்சாக் கொள்கைஎம் காதலர் வரல்நசைஇத்**
**துஞ்சாது அலமரு பொழுதின்,**
**அஞ்சுவரக் கடுங்குரல் பயிற்றா தீமே (நற்.83,1-4,7-9)**

எனக் கூகையைப் பார்த்துப் பேசுகிறாள் (குறுந்.69,76,141,158,263,) நற்(83,107,251,376) பொருள், பகைவயிற் காரணமாகப் பிரிந்த தலைவனை எண்ணி ஆற்றாமை மிக்கவளாகத் தலைவி புலம்புகிறாள்.

**'அருந்துயர் உழத்தலின் உண்மை சானம்' எனப்**
**பெரும்பிறிது இன்மையின் இலேனும் அல்லென்**
**கரை பொருது இழிதரும் கான்யாற்று இகுகரை**
**வேர்கிளர் மராஅத்து அம்தளிர் போல,**
**நடுங்கல் ஆனா நெஞ்சமொடு, இடும்பை**
**யாங்கனம் தாங்குவென் மற்றே? ஓங்கு செலல்**
**கடும்பகட்டு யானை நெடுமான் அஞ்சி**
**ஈர நெஞ்சமோடு இசைசேண் விளங்கத்**
**தேர்வீசு இருக்கை போல,**
**மாரி இரீஇ மான்றன்றால் மழையே (நற்.381:1:10)**

எனும் பாடலில் புறச்செய்தியான அஞ்சியின் கொடையினைப் போல மேகம் மழையைப் பொழிந்தது எனக் கூறும் தலைவி, மரங்கள் எல்லாம் வெள்ளம் மோதுதலால் வேர்கள் எல்லாம் பிடிப்பற்று அசையும் மரத்தினது தளிரைப் போல நடுக்கம்கொண்ட நெஞ்சத்தோடு ஆற்றாது வருந்தினாள். தலைவனும் தன் ஏக்கவுணர்வை வெளிப்படுத்துகிறான்,

**"ஒண்தொடி அரிவை கொண்டனள், நெஞ்சே!**
**வண்டுஇமிா பனித்துறைத் தொண்டி ஆங்கண்**
**உரவுக் கடலொலித் திரைபோல,**
**இரவினாலும் துயில்அறி யேனே!" (ஐங்.172:1-4)**

என்பதில் தலைவி தலைவனின் மனதைக் கவர்ந்தனள். ஆகையால் தலைவன் இரவானாலும் தூங்காமல் இருக்கிறான். அகப்பாடலின் கவிதையாக்க மரபின் உள்ளுறையும் ஒன்று. நெய்தல் தலைவனுக்கு உள்ளுறையாக நாரை, வெள்ளாங்குருகு பயன்படுத்தப்பட்டுள்ளன.

**“வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தெனக்**
**காணிய சென்ற மடநடை நாரை**
**மிதிப்ப, நக்க கண்போல் நெய்தல்**
**கள்கமழ்பு ஆனாத் துறைவற்கு**
**நெக்க நெஞ்சம் நேர்கல் லேனே” (ஐங்.151:1-5)**

அதேபோல்,

**புன்னையம் கானல் புறந்தை முன்னுறை**
**வம்ப நாரை இனன் ஒலித்தன்ன (அகநா.100:13-15)**

ஆகிய பாடல்களில் தலைவனின் ஒழுக்கப் பிறழ்வால் கோபமடைகிறாள் தலைவி.

**வலைவல் பாண்மகன் வாலெயிற்று மடமகள்**
**வராஅல் சொரிந்த வட்டியுள், மனையோள்**
**யாண்டுகழி வெண்ணெல் நிறைக்கும் ஊர!**
**வேண்டேம் பெருமநின் பரத்தை**
**ஆண்டுச்செய் குறியோடு ஈண்டுநீ வரலே (ஐங்.48:1-5)**

இப்பாடல் பரத்தையிடம் சென்று மீளும் தலைவனைத் தலைவி கடிந்து கொள்ளும் நிலையை உணரலாம்.

சங்க அகப்பாடல்கள் பெரிதும் உணர்வெழுச்சிமிக்க கவித்துவமாகக் காணப்படுகின்றன. சங்கக் கவிதையில் பண்பின் மூலக்கூறாக அகமாந்தர்களின் மனவெழுச்சி மிக்க சூழல்கள் அமைந்துள்ளன. தமிழின் கவிதையியல் வளர்ச்சியானது, பண்டைச் சமூகத்தின் வரலாற்றுப் பின்புலத்திலும் அவை தோற்றுவிக்கும் மனித உணர்வு முறையிலும் வைத்து நோக்கப்பட வேண்டும்.